**CC.No**. 135/2024

**Date**: 16.04.2026

**ம.சா.** 1. பாரதராஜன் த/பெ. கிருஷ்ணசாமி, காரைக்குடி
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

<u>குறுக்கு விசாரணை</u>

**1) எதிரியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 10 வருடங்களாக தெரியும். எதிரியின் சொந்த ஊர் எது என்றால் பாலக்காடு. எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் மரவேலைபாடு உள்ள கலைப்பொருள் தொழில் செய்கிறார். காரைக்குடியில் இருந்து பொருட்கள் வாங்கி சென்று பாலக்காட்டில் விற்பனை செய்வார். எதிரியை எப்படி தெரியும் என்றால் என் நண்பர் தினகரன் என்பவர் மூலம் அறிமுகம் ஆனார். நான் எதிரி செய்யும் தொழில் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது சொந்த உபயோகத்திற்காக வைத்திருந்த பொருட்களை எதிரி என்னிடம் இருந்து பெற்றுச்சென்றார். எந்த தேதியில் என்னிடம்இருந்து பொருட்களை வாங்கினார் என்றால் 04.02.2024 ல் வாங்கினார். என்னிடம் இருந்து பெற்ற பொருட்களுக்கு ரசீதோ அல்லது புகைப்படங்களோ வைத்திருக்கிறேனா என்றால் செட்டியார் வீடுகளில் வாங்கியதால் அதற்கு ரசீது இல்லை. மேற்படி பொருட்களின் மதிப்பை எப்படி கணிப்பேன் என்றால் நான் வாங்கிய விலையில் இருந்து கொஞ்சம் லாபத்தொகை சேர்த்து வைத்துக்கொடுத்தேன். நான் பொருட்கள் கொடுத்தற்கு என்னையும் எதிரியையும் தவிர வேறு யாரேனும் சாட்சிகள் இருக்கின்றனரா என்றால் இல்லை.**

**2) என்னிடம் பெற்ற பொருட்களுக்கு மணிகண்டன் எப்படி பணம் கொடுத்தார் என்றால் மொத்தம் ரூ. 10 லட்சத்து 40 ஆயிரம் இருந்தது. ரூ. 40 ஆயிரத்தை கையில் ரொக்கமாக கொடுத்துவிட்டு மீத தொகைக்கு ரூ. 5 லட்சம் வீதம் இரண்டு காசோலைகள் கொடுத்தார். 2 காசோலைகள் மட்டும்தான் கொடுத்தாரா என்றால் ஆமாம். காசோலையில் என்ன தேதியிட்டு கொடுத்தார் என்றால் ஒரு காசோலை 04.05.2024 என்றும் மற்றொரு காசோலை 04.06.2024 தேதியிட்டு கொடுத்தார். நான்**

சொல்வதுபோல் மேற்படி சம்பவம் எதுவும் காரைக்குடியில் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு சில வருடங்களுக்கு முன்னர் விபத்து ஏற்பட்டதால் அவரால் வெகு தூரம் பயணம் செய்ய முடியாது என்றால் சரியல்ல, விபத்து நடந்து பல வருடங்கள் ஆகிவிட்டது. எதிரிக்கு விபத்து நடந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். எப்போது விபத்து ஏற்பட்டது என்றால் சுமார் 6–7 வருடங்கள் இருக்கும். நான் சொல்வதுபோல் எதிரி என்னிடம் எந்த கலை பொருட்களையும் வாங்கவில்லை என்றாலும் அதற்கு ஆதரவாக காசோலைகள் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் கணக்கில் ரூ.5 லட்சம் பணம் செலுத்தினேன் என்றால் சரிதான். நான் செலுத்திய தொகைக்கு ஆதரவாக எதிரி என்னிடம் பொருட்கள் வாங்குவதற்கு ஆதரவாக 3– 4 காசோலைகள் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது மகன் வீரா மற்றும் எனது பெயரில் உள்ள வங்கி கணக்குகளில் எதிரி பணம் செலுத்தியுள்ளார் என்றால் பல கணக்குகளுக்கு செலுத்தியுள்ளார்.

3) எதிரி வாங்கிய ரூ.5 லட்சம் வங்கி கணக்கு பரிவர்த்தனைக்கு எதிரிக்கு விபத்து ஏற்பட்டதால் அதற்குறிய கலைப்பொருட்களை வாங்கி கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டதால் மேற்படி எனது மகன் மற்றும் எனது வங்கி கணக்கில் பணம் செலுத்தியதாக கூறுவது சரியல்ல. எதிரிக்கு எனக்கும் உள்ள வங்கி பரிவர்த்தனைகளை தாக்கல் செய்ய தயாரா என்றால் பல வருட கணக்கு இருப்பதால் தாக்கல் செய்ய இயலவில்லை. எதிரி மீது பாலக்காட்டில் ஒரு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் என்ன விபரம் சொல்லியுள்ளேன் என்றால் இங்கு சொல்லியுள்ள விபரத்தைதான் அங்கும் சொல்லியுள்ளேன். அங்கு என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இந்த வழக்கின் ஆவணங்களை சான்றிட்ட நகல் பெற்று அங்கு தாக்கல் செய்துள்ளேன். ஒரே பரிகாரம் கோரி இரண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாலக்காட்டில் தாக்கல் செய்துள்ள வழக்கு விபரம் மற்றும் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா என்றால் தயாராக இருக்கிறேன். நான் சொன்ன தேதியில் எதிரி எந்த பொருட்களையும் எதிரி என்னிடம் பெறவில்லை என்றாலும் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிக்கு விபத்து

**ஏற்பட்ட காலத்திற்கு பின்னர் கடைசியாக நான் எதிரியின் வங்கி கணக்கில் செலுத்திய பணத்திற்கு கலைப்பொருட்கள் கொடுக்க முடியாத காரணத்தினால் வழக்கு காசோலைகளை வைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி விபத்திற்கு பின்னர் காரைக்குடி வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. பல முறை வந்துள்ளார். எதிரி என்னிடம் எந்த பணம் பெறவில்லை என்றாலும், வாங்கிய தொகைக்கு ஆதரவாக வங்கி பரிவர்த்தனையின் மூலம் பணம் திருப்பி செலுத்தியுள்ளார் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி பணத்தை திருப்பி செலுத்த வேண்டியதில்லை என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.16 18:24:47 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)